Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு**
**வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை**
**மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்**
**பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே**

1. இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர்** :
- **இவரது வல்லமைகளாகக் குறிப்பிடப்படுவன** :
- **இவருக்குரிய சிறப்பு** :
- **இவர் வாழ்ந்த காலம்**

2. பின்வரும் தொடர்களுக்கான பொருளைத் தருக

- கழியும் பிழை :
- வழியும் பொதிகை வரை :
- மொழியும் புலவர் :
- பொழியும் :

3. பின்வரும் சொற்கள் குறிக்கும் **பலசொற்களைத்** தருக

- **கடல்**
- **வரை**
- **மொழி**
- **கவி**

4. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக

- **கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு**
- **மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்**

5. வண்கவிதை மொழியும் புலவர் சிறப்புக்களைத் தருக
6. காளமேகப் புலவரின் கவியாற்றல் எத்தகையது
7. **நன்னூலாங் கடல், புலவர் மனம்** என்ற தொடர்களில் புலப்படும் அணிகளைக் குறிப்படுக
8. **கழியும், வழியும், மொழியும், பொழியும்** என்ற சொற்களில் காணப்படும் சொல்லணியாது

9. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக

* **நன்னூல் :**
* **பொருட்டள்ளி :**

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

10. கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை

(அ) **கால் கொண்டு** என்ற தொடரால் நீர் கருதிக் கொள்வது

(ஆ) **வண்கவிதை** என்றால் என்ன

11. கழியும் பிழைபொருட் டள்ளிநன்னூலாங் கடலிலுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை

(அ) **பொதிகை வரை** என்ற தொடர் குறிப்பது

(ஆ) **நன்னூலாங் கடலிலுண்டு** என்ற தொடரின் கருத்து யாது

12. மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

(அ) **மொழியும் புலவர்** என்பதன் கருத்து யாது?

(ஆ) **கவிகாள மேகம்** என்ற தொடரின் கருத்து யாது?

**பின்வரும் பாடலை வைத்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக**

**ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை**
**பற்றிப் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்**
**உற்றிடுபாம் பெள்ளெனவே யோது**

1. இப்பாடலின் ஆசிரியர் பற்றிய குறிப்புக்களைத் தருக

- **ஆசிரியர் பெயர்** :
- **இவரது வல்லமைகளாகக் குறிப்பிடப்படுவன** :
- **இவருக்குரிய சிறப்பு** :
- **இவர் வாழ்ந்த காலம்**

2. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணி யாது
3. இப்பாடலில் ஒப்பிடப்பட்டுள்ள இரண்டு பொருள்களும் எவை
4. பின்வரும் தொடர்களிலுள்ள இரண்டு பொருள்களையும் தனித்தனியே எழுதுக

| பாடலடி | முதலாவது பொருள் (எள்) | இரண்டாவது பொருள் (பாம்பு) |
|---|---|---|
| ஆடிக் குடத்தடையும் | | |
| ஆடும்போதே இரையும் | | |
| மூடித் திறக்கின் முகங்காட்டும | | |
| ஓடிமண்டை பற்றிப் பரபரெனும் | | |
| பாரிற்பிண் ணாக்குமுண்டாம் | | |

5. **பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக**

- ஆடும்போதே இரையும்
- உற்றிடுபாம் பெள்ளெனவே யோது

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

6. **ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்**
**மூடித் திறக்கின் முகங்காட்டும்**

(அ) **முகங்காட்டும் என்பதால் நீர் கருதிக் கொள்வது யாது**
(ஆ) **ஆடி, மூடி என்ற சொற்களில் காணப்படும் சொல்லணியாது**

7. ..............................................................**ஓடிமண்டை**
**பற்றிப் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்**
**உற்றிடுபாம் பெள்ளெனவே யோது**

(அ) **பிண்ணாக்கு** என்பது குறிக்கும் இரு பொருள்களும் எவை
(ஆ) **உற்றி** என்பதன் கருத்து யாது?